1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்தெந்த கிராமங்களில், விதிகளின்படி, பொறுப்புகளை வகிக்க பொறுத்தமாக, அரிசனங்கள் முன்வருகிறார்களோ, அவர்கள் நியமிக்கப்படுவதில் ஆட்சேபணை கிடையாது.

ஓட்டன் கால்வாய் மராமத்து

218* **வினா. திரு. எம். முத்தையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓட்டப்பிடாரம் வட்டம், கீழமங்கலம் கிராமத்தில் உள்ள ஓட்டன் கால்வாய்க் கரைகளைச் செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கீழமங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த ஓட்டன்கால்வாயிலிருந்து சிப்பிகுளம் கண்மாய்க்கு செல்லும் பிரிவு கால்வாய் ஓரத்தில் ஏற்பட்ட உடைப்பும் ஓட்டன்காலில் ஏற்பட்ட உடைப்பும் மராமத்து செய்யப்பட்டு 16—8—1975-இல் முடிவு பெற்றது.

திரு. எம். முத்தையா: ஓட்டன்காலிருந்து கீழமங்கலம் பெரிய கண்மாய்க்கு நீண்ட காலத்திற்கு முன்னால் வெட்டப்பட்டது. இதுநாள் வரை அதை மராமத்து செய்யவில்லை. இப்போதாவது அதை மராமத்து செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதைப் பற்றி பொதுப் பணித் துறைக்கு எழுத வேண்டும்.

தூத்துக்குடி அனல் மின் திட்டம்.

219* **வினா. திரு. கா. வேழவேந்தன்:
திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு

தொழில்—மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் பணிகள் எந்நிலையில் உள்ளன?

(இ) எப்போது உற்பத்தி தொடங்கப்படும்?